2013 ஏப்ரல் 5]

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பாளையம் என்ற ஊரில் உள்ள குறிஞ்சி நகரில், தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்று குழந்தைகள் காப்பகத்தை நடத்தி வருகிறது. அந்த குழந்தைகள் காப்பகம் சமூக நலத் துறையின் அனுமதி பெற்று, துறையின் நிதியுதவியுடன் நடந்து வருகிறது. பஸ் மற்றும் இரயிலில் தவறி வருகின்ற குழந்தைகள் அந்தக் காப்பகத்தில்தான் ஒப்படைக்கப்படுகிறார்கள். அந்த காப்பகத்தில் 230 குழந்தைகள் கல்வி பயின்று வருகிறார்கள். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் அந்தக் குழந்தைகளுக்கு அரசாங்கத்தின் இடைநிலை ஆசிரியர்கள்மூலம் கல்வி கற்பிக்கப்படுகிறது. அதேபோன்று ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க போதிய ஆசிரியர்களை அங்கே நியமனம் செய்ய அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் காப்பகத்தில் இதுபோன்ற குறைகள் இருக்கின்றன என்பதை குறிப்பிட்டு எழுதிக் கொடுப்பாரேயானால், உடனடியாக அங்கே ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

153—

பொறியியல் கல்லூரி

***7040—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, மொரப்பூரில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் ஓர் அரசு பொறியியல் கல்லூரி வரவேண்டும் என்பது அந்த மாவட்ட மக்களின் நீண்ட நாள் கனவாகும். அதனை நிறைவேற்றுகிற வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற ஆண்டு தருமபுரி மாவட்டத்திற்கென ஒரு புதிய அரசு பொறியியல் கல்லூரியை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரூர் தொகுதியைச் சார்ந்த மொரப்பூரில் ஒரு பொறியியல் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய பொறியியல் கல்லூரிகளில் 364 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பொறியியல் கல்லூரிப் படிப்பை மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னால், தருமபுரி மாவட்டத்தில் தேவையான இடங்கள் கல்லூரிகளில் இருக்கின்றன. மேலும் சிறப்பு அம்சமாக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஒரு பொறியியல் கல்லூரியை அந்த மாவட்டத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கல்லூரி கூடிய விரைவில் தொடங்கப்படவிருக்கிறது. ஆகவே, தற்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில், அங்கு பொறியியல் கல்லூரி அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கல்வி அறிவில் மிகவும் பின்தங்கிய மாவட்டம் தருமபுரி மாவட்டம் என்பதை அனைவரும் அறிவோம். 62.1 சதவிகித மாணவர்கள் மட்டுமே எழுத்தறிவு பெற்றவர்கள். அதிலும்*

2013 ஏப்ரல் 5]

குறிப்பாக, 51 சதவிகித பெண்கள் மட்டுமே எழுத்தறிவு பெற்றவர்கள். உண்மையிலேயே 45 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 3 ஆண்டுகளிலேதான் 4 கலைக் கல்லூரிகள் தருமபுரி மாவட்டத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் அந்தக் கல்லூரியை வழங்கினார்கள் என்றாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அந்தக் கல்லூரியைத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில்கூட. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு. கேள்வியை கேளுங்கள். (குறுக்கீடு) சுருக்கமாக துணைக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, என்னுடைய அரூர் தொகுதியில், ஒரு வருடத்திற்கு 10,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பிளஸ் 2 முடித்துவிட்டு கல்லூரிக்கு செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. பட்டியலிட்டுப் பார்த்தால் ஏறக்குறைய 40-க்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள், 20-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் அரூர் தொகுதியில் இருக்கின்றன. நான் கேட்டிருக்கக்கூடிய மொரப்பூர் தொகுதி, கடந்த காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தொகுதி; இரயில் நிலையம் இருக்கக்கூடிய பகுதி. அத்தகைய பகுதியிலே ஓர் அரசு பொறியியல் கல்லூரியைக் கொண்டுவரும்பட்சத்தில், பின்தங்கிய அந்த மாவட்டத்தில் நிச்சயமாக மீண்டும் கல்வி அறிவு பெறுவதற்கும், வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் அது ஏதுவாக அமையும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மொரப்பூரிலே ஓர் அரசு பொறியியல் கல்லூரியைக் கொண்டு வரவேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையைப் பரிசீலிப்பார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, தருமபுரி மாவட்டம் கல்வியிலே பின்தங்கிய மாவட்டம்தான். கல்வியிலே பின்தங்கி இருக்கக்கூடிய அந்த*

மாவட்டத்தை, கல்வியிலே முன்னேறி வருகிற மாவட்டமாக உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சி அமைந்த இரண்டே ஆண்டுகளில் இதுவரை 4 கல்லூரிகளை அந்த மாவட்டத்திற்கு மட்டும் தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பாப்பிரெட்டிப்பட்டி தொகுதியில் ஒரு கல்லூரி இல்லாமல் இருந்தது. அங்கே ஒரு கலைக் கல்லூரியைத் தந்தார்கள். நீங்கள் சார்ந்திருக்கிற அரூர் தொகுதியில் கல்லூரி இல்லாமல் இருந்தது. அந்தத் தொகுதிக்கும் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைக் கொடுத்திருக்கிறார்கள். காரிமங்கலம் தொகுதிக்கு குறிப்பாக, அங்கே பெண்கள் மட்டும் படிக்க வேண்டும், உயர் கல்வியைப் பெறுகிறவர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடு காரிமங்கலத்திற்கு ஒரு புதிய அரசு பெண்கள் கல்லூரியைத் தந்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-10

அதோடு மட்டுமல்லாமல், அந்த மாவட்டத்தினுடைய நீண்டநாள் கனவினை நிறைவேற்றுகின்ற வகையில், மாணவர்கள் பொறியியல் படிப்பில் சேர்ந்து படிக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான், அங்கே பொறியியல் கல்லூரியை வழங்கியிருக்கிறார்கள். ஆட்சி அமைந்த இரண்டு ஆண்டுகளில், ஒட்டுமொத்தமாக 4 கல்லூரிகளை வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்குக் காரணம், அந்த மாவட்டம் கல்வி அறிவு குறைந்திருக்கிற மாவட்டம்; கல்வியிலே பின்தங்கிய மாவட்டம், கல்வியில் முன்னேற்றம் காண்கின்ற மாவட்டமாக அதை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அங்கே பொறியியல் கல்லூரி வழங்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், புதிதாக அமையவிருக்கின்ற அந்தப் பொறியியல் கல்லூரியானது, நீங்கள் கேட்டிருக்கின்ற மொரப்பூரிலிருந்து குறைந்தது 12 கிலோ மீட்டர் தொலைவில்தான் அமையவிருக்கிறது. ஆகவே மொரப்பூரிலிருந்து, வெறும், 12 கிலோ மீட்டர் தொலைவிலேயே அந்தக் கல்லூரி இருக்கின்ற காரணத்தால், அங்கேயே போய் படிப்பதற்கான ஒரு வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தற்போது 553 கல்லூரிகள் இருக்கின்றன. இந்தக் கல்லூரிகளில் நம்முடைய மாணவர்கள் சேர்ந்து படிக்க எவ்வளவு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னால், 2,62,164 மாணவர்கள் சேர்ந்து

படிக்கலாம். அப்படி படிக்க வாய்ப்பு இருக்கின்ற காலகட்டத்தில், சென்ற ஆண்டு மாணவர்களுடைய சேர்க்கை விகிதம் எவ்வளவு என்று சொன்னால், 1,82,491 இடங்கள்தான் பூர்த்தியாகி இருக்கின்றன. ஆக மீதம், இன்னும் 79,673 இடங்களில் மாணவர்கள் சேராத ஒரு நிலை இருக்கிறது. இந்த நிலையில், தனியார் கல்லூரிகளில் மட்டும் 55,055 மாணவர்கள் சேருவதற்கான வாய்ப்பிருக்கிறது. அரசுக் கல்லூரிகளிலே 24,618 இடங்களில் சேருவதற்கான வாய்ப்பிருக்கிறது.

Engineering கல்லூரிகளில் மாணவர்களுடைய சேர்க்கையைப் பொறுத்தவரையில், ஒற்றைச் சாளர முறையில் - single window system மூலம் அரசு ஒதுக்கீடாக ஒதுக்கப்பட்ட இடங்கள் 1,20,663; அதோடு மட்டுமல்ல; நம்முடைய நிர்வாக இட ஒதுக்கீடாக ஒதுக்கப்பட்ட இடங்கள் 54,975; சிறுபான்மையின பிரிவினருக்காக 6,562 இடங்கள் இருக்கின்றன. அதோடு மட்டுமல்ல; நம்முடைய இந்திய நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், இந்தியாவிலே பிறந்து வெளிநாடுகளிலே வசித்துக்கொண்டிருப்பவர்கள், அதாவது N.R.I. quota என்று சொல்வார்கள், அவர்களுக்காக நம்முடைய பொறியியல் கல்லூரிகளில் 51 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்ல, மத்திய அரசின் M.H.R.D. - மூலமாக வரும் மாணவர்களுக்கென நாம் ஒருசில இடங்களை ஒதுக்கியிருக்கிறோம். அதன்மூலமாக 95 மாணவர்கள் சேருவதற்கு வாய்ப்பிருக்கிறது.

அதோடுமட்டுமல்லாமல், வெளிநாடுகளிலேயிருந்துகூட நம்முடைய பல்கலைக்கழகங்களிலே சேர்ந்து படிப்பதற்கான வாய்ப்பிருக்கிறது. அதன்மூலமாக 145 இடங்கள் இருக்கின்றன. அப்படியிருக்கக்கூடிய நிலையில், ஏற்கெனவே மாணவர்கள் சேருவதற்கான வாய்ப்பு இருக்கிற காலகட்டத்தில் புதிதாகக் கல்லூரிகளைத் தொடங்க வேண்டிய அவசியம் எழவில்லை. இங்கே புதிதாக உருவாக்கப்படுகிற கல்லூரியில் நம்முடைய மாவட்டத்தைச் சார்ந்த மாணவர்கள் சேர்ந்து பயன்பெற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொரப்பூர், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய மூன்று ஒன்றியங்களையும் சேர்த்து, எந்தவொரு தனியார் பொறியியல்

கல்லூரியும் இல்லை. ஆகவேதான், நான் மீண்டும் அந்தக் கோரிக்கையை வலியுறுத்தினேன். இருப்பினும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையுடன் பரிசீலித்து, அரசு பலவகை பாலிடெக்னிக் கல்லூரியை மொரப்பூரிலே தொடங்குவதன் மூலமாக, பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் எதிர்காலத்தில் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான வாய்ப்பு உருவாகும். அந்தவகையில், ஒரு பாலிடெக்னிக் கல்லூரியையாவது மொரப்பூரிலே தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பலவகை தொழில்நுட்பக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அது வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருகிற கல்லூரிதான். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 450 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. அரசுக் கல்லூரிகளாக 30 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரிகளாக 34 கல்லூரிகளும் இருக்கின்றன. சென்ற முறை கிராமப் பகுதிகளிலே, இதுபோன்ற கல்வியிலே பின்தங்கியிருக்கக்கூடிய மாவட்டங்களில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தமிழகத்திலே 10 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைக் கடந்த இரண்டு ஆண்டுகளில் தொடங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

7 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி உயர் கல்வித் துறையின் சார்பாகத் தொடங்கவிருக்கிறோம். மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் சார்பாக 3 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை மதுரை மாவட்டத்திலே தொடங்கவிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி பொறியியல் கல்லூரி வேண்டும், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார். தருமபுரி மாவட்ட மக்கள், மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையில் தேவையான அளவிற்குக் கல்லூரிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அப்படி

மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கிற காலத்தில், எதிர்காலத்தில் தேவை ஏற்படுகிற காலத்தில், இதுபோன்ற கல்லூரிகளைத் தொடங்குவதற்கு நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆலோசனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

150—

துணை மின் நிலையம்

***19945—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, அடையார் காந்தி நகர் பகுதியில் துணை மின்நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். வேளச்சேரி தொகுதி, அடையார் காந்தி நகரில் ஒரு 33/11 கே.வி. உள்ளடக்கிய துணை மின் நிலையம்- Indoor sub-station-*இரண்டு 8 எம்.வி. திறன்கொண்ட மின்மாற்றிகளுடன் அமைப்பதற்கு 8 கோடி ரூபாய் மதிப்பில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*